**திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
பிறப்பிப்பவர்: திரு.பெ.இரவிச்சந்திரன், எம்.எஸ்ஸி.,எம்.ஏ.,எம்.எட்.,

---

திருவள்ளுவராண்டு– 2055 குரோதி வருடம் ஐப்பசி திங்கள் ஆம் நாள்.
ந.க.எண்.3189/அ1/2023 நாள்: .10.2024

பொருள் : பள்ளிக்கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் நியமனம் –திருவள்ளூர் மாவட்டம் – காலஞ்சென்ற இடைநிலை ஆசிரியர் திரு.S.M.காந்தி என்பாரின் வாரிசுதாரரான மனைவி திருமதி.V.திருவருள்செல்வி என்பவருக்கு அரசின் அறிவுரையின்படி 13.10.2022 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணை வழங்குதல் – சார்ந்து.

பார்வை :
(1) அரசாணை(நிலை) எண்.101/பள்ளிக்கல்வித் துறை நாள்.18.05.2018
(2) அரசாணை (நிலை) எண்.48/தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.26.02.2021
(3) திருவள்ளூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.9300/அ1/2022 நாள். 13.10.2022
(4) அரசாணை எண்.151, ப.க.SE1(1), துறை, நாள்.09.09.2022
(5) திருவள்ளூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.3189/அ1/2023 நாள்.19.07.2023
(6) அரசு கடித (efile) எண்.4419/தொ.க 1(1) / 2024–1 நாள்.17.05.2024
(7) தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், ந.க.எண். 26062/ஜே/இ2/2023 நாள்.22.05.2024
(8) தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.33001/ஜே/இ4/2023 நாள்.13.08.2024.

----

**ஆணை:–**

திருவள்ளூர் மாவட்டம், ஸ்ரீகாளிகாபுரம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்த் போது 28.01.2015ல் காலமான திரு.S.M.காந்தி என்பாரின் வாரிசுதாரரான மனைவி திருமதி.V.திருவருள்செல்வி என்பவருக்கு பார்வை 3ல் கண்டவாறு கருணை அடிப்படையில் திருவள்ளூர் மாவட்டம், பேரம்பாக்கம், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு 13.10.2022 பிற்பகல் முதல் தற்போது இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர், வட்டாரக்கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 6ல் காணும் அரசு கடிதத்தின்படி, இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சராக கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களுக்கு நியமன அலுவலர் நிலையில் கருத்துருவினை பரிசீலித்து பணிவரன்முறை செய்திட பார்வை 7ல் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகளில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.